## ‘தகைசால் தமிழர்’ மறைந்த அய்யா குமரி அனந்தன்

# தமிழால் நம் நெஞ்சங்களில் என்றும் நிறைந்திருப்பார்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் புகழாரம்!

**சென்னை, ஏப். 10 -**

**தகைசால் தமிழர் மறைந்த அய்யா குமரி அனந்தன் அவர்கள் தமிழால் நம் நெஞ்சங்களில் என்றும் நிறைந் திருப்பார் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் புகழாரம் சூட்டி யுள்ளார்.**



இலக்கியச் செல்வர் அய்யா குமரி அனந்தன் அவர்களின் மறைவை யொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங் கல் செய்தி வருமாறு:

காங்கிரஸ் பேரியக்கத்தின் மூத்த தலைவரும் தமிழின்பால் பெரும் பற்று கொண்டவருமான இலக்கியச் செல்வர் அய்யா குமரி அனந்தன் அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தி யறிந்து மிகுந்த துயருற்றேன்.

குமரி மாவட்டத்தில் பிறந்து, பெருந்தலைவர் காமராசரின் அடி யொற்றி, காங்கிரஸ் பேரியக்கத்துக் காகத் தன்னை ஒப்படைத்துக் கொண்ட அவரது மறைவு தமிழ்ச்ச மூகத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். தனது அயராத உழைப்பால் மக்க ளின் நன்மதிப்பைப் பெற்ற அவர், ஒரு முறை நாடாளுமன்ற உறுப்பின ராகவும், நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டுத் தொண்டாற்றினார். நாடாளு மன்றத்தில் தமிழில் பேசுவதற்கான உரிமையை நிலைநாட்டிய பெருமை இவரையே சாரும். அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்கள் இது குறித்து குறிப்பிடும்போது, “தனிமரம் தோப்பாகாது என்ற பழமொழியை மாற்றி அமைத்துவிட்டார்” எனப் புக ழாரம் சூட்டினார்.

தமிழே தன் மூச்செனத் தமிழ்த் திருப்பணிக்கு வாழ்ந்திட்ட அவரது பெருவாழ்வைப் போற்றி, அவருக்கு நமது அரசின் சார்பில் கடந்த ஆண்டு ‘தகைசால் தமிழர்’ விருது வழங்கி பெருமை கொண்டோம். விடுதலை நாள் விழாவில் அந்த விருதினை நான் வழங்கியபோது, என் கைகளை இறுகப்பற்றிக் கொண்டு வாஞ்சை யோடு உறவாடிய அவரது நினைவு என் கண்களில் கண்ணீரைப் பெருக்குகிறது. ஏராளமான நூல்க ளையும் எண்ணற்ற மேடைகளை யும் கண்ட அவரது தமிழால் நம் நெஞ்சங்களில் அவர் என்றும் நிறைந் திருப்பார் என ஆறுதல் கொள்கிறேன்.

‘தகைசால் தமிழர்’ அய்யா குமரி அனந்தன் அவர்களது மறைவால் வாடும் அருமை சகோதரி தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்ட அவரது குடும்பத்தினர், உறவினர்கள், காங்கி ரஸ் பேரியக்கத் தொண்டர்கள், அரசி யல் மற்றும் இலக்கிய வட்டங்களைச் சேர்ந்த சொந்தங்கள் என அனை வருக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரி வித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங் கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் கிழக்கு மாநகர பொன்மலை பகுதி திமுக சார்பில் மாஜி ராணுவ காலனி மெயின் ரோட்டில் நடைபெற்றது. இ.எம்.தர்மராஜ் தலைமை தாங்கினார். சுப்பிரமணி வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சேலம் மாவட்டக் கழகச் செயலாளர் சுற்றுலாத்துறை அமைச்சர் பனைமரத்துப்பட்டி ராஜேந்திரன், மாநகரக் கழகச் செயலாளர் மு மதிவாணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். எஸ்.துரை நன்றியுரையாற்றினார். இக்கூட்டத்தில் கே.என்.சேகரன் செங்குட்டுவன் மூக்கன், லீலாவேலு, நூர்கான், பொன்செல்லையா, சரோஜினி, தமிழ்ச்செல்வன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## இலக்கியச் செல்வர் மறைந்த

# அய்யா குமரி அனந்தன் திருவுடல் அரசு மரியாதையுடன் அடக்கம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஏப். 10 -

“மறைந்த இலக்கியச் செல்வர் அய்யா குமரி அனந்தன் அவர்களின் திரு வுடல் அரசு மரியாதையு டன் அடக்கம் செய்யப்படும்” என தமிழ்நாடு முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் அறிவித்துள்ளார்.

காங்கிரஸ் பேரியக்கத் தின் மூத்த தலைவர், இலக் கியச் செல்வர் அய்யா குமரி அனந்தன் அவர்கள் மறை வுற்ற செய்தியை அறிந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது வேதனையையும், வருத் தத்தையும் தெரிவித்துள்ள தோடு, மறைந்த குமரி அனந்தன் அவர்களின் குடும்பத்தி னருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பி னராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் தமிழ்ச் சமுதாயத்திற்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் அரும் பணியாற்றிய அய்யா குமரி அனந்தன் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் “தகைசால் தமிழர்” கடந்த ஆண்டு வழங்கி கௌரவிக் கப்பட்டது.

தமிழே தன் மூச்செனத் தமிழ்த் திருப்பணிக்காக வாழ்ந்திட்ட அய்யா குமரி அனந்தன் அவர்களின் பெருவாழ்வைப் போற்றி டும் வகையில், அவரது திரு வட லுக்கு அரசு மரியாதை யுடன் பிரியாவிடை அளிக்கப்படும் என தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறி வித்துள்ளார்.

# “அதிகாரங்களை அபகரிக்கும் ஆளுநர்களுக்கு எச்சரிக்கை!”

### உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு – கேரள முதல்வர் பினராயி விஜயன் வரவேற்பு!

**திருவனந்தபுரம், ஏப்.10 -**

**மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் ஆளுநர் நிறுத்தி வைத் ததை எதிர்த்து தமிழக அரசு தொடர்ந்த வழக்கில் உச்ச நீதிமன் றம் அளித்துள்ள தீர்ப்பு கூட்டாட்சி அமைப்பை உறுதிப்படுத்தக் கூடியது என கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து அவர் தெரிவித்த தாவது:-

உச்சநீதிமன்ற தீர்ப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ள பினராயி விஜயன், “மசோதாக்களுக்கு ஒப்பு தல் வழங்காமல் ஆளுநர் நிறுத்தி வைத்ததை எதிர்த்து தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் உச்சநீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்பு கூட் டாட்சி அமைப்பையும், சட்டமன் றத்தின் ஜனநாயக உரிமை களையும் நிலைநிறுத்துகிறது. அமைச்சரவையின் ஆலோசனை யின்படி ஆளுநர்கள் செயல்பட வேண்டும் என்பதை உச்ச நீதி மன்றம் ஏற்கெனவே பலமுறை தெளிவுபடுத்தியுள்ளது.

மேலும், இந்த தீர்ப்பு மசோதாக் களை நிறைவேற்றுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவை நிர்ண யித்துள்ளது. சட்டமன்றத்தின் அதி காரங்களை ஆளுநர்கள் அபகரிக் கும் போக்குக்கு எதிரான எச்சரிக்கை யாகவும் இந்தத் தீர்ப்பு அமைகிறது.

இது ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி. கேரள சட்டமன்றத்தால் நிறை வேற்றப்பட்ட மசோதாக்கள் 23 மாதங்கள் வரை கிடப்பில் போடப்பட்ட நிலையில் உள்ளன. இதற்கு எதிரான சட்டப் போராட்டத் தில் கேரளா ஈடுபட்டுள்ளது. இந்தத் தீர்ப்பு, கேரளா எழுப்பிய இது போன்ற பிரச்சினை களின் பொருத்தத்தையும் முக்கி யத்துவத் தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகி றது”

இவ்வாறு கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித் துள்ளார்.

# பெரம்பலூரில் தண்ணீர் பந்தல்: பேராசிரியர் சுப.வீரபாண்டியன் திறந்து வைத்தார்!

### வீ.ஜெகதீசன் - எம். பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், ஏப். 10 -

பெரம்பலூர் நகர தி.மு.க.சார்பில் அமைக்கப் பட்டிருந்த தண்ணீர் பந் தலை திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன் திறந்து வைத்தார்.

மாவட்ட கழக பொறுப் பாளர் வீ.ஜெகதீசன். சட் டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர். தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன் னிட்டு, பெரம்பலூர் நகர தி.மு.க. சார்பில், பெரம்ப லூர் ஸ்டேட் வங்கி கிளை அருகில் அமைக்கப்பட்டி ருந்த நீர் மோர், தண்ணீர் பந்தலை திராவிடர் இயக் கத் தமிழர் பேரவை தலை வர் சுப.வீரபாண்டியன் திறந்து வைத்தார். இதில் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை பொதுச்செயலா ளர் சிற்பி.செல்வராஜ், திராவிடர் கழக துணைப் பொதுச்செயலாளர் வழக்க றிஞர் மதிவதனி, தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் எஸ்.பத்மபி ரியா, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன் னம் சி.இராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்தி ரன், பொதுக்குழு உறுப்பி னர்கள் செ.அண்ணாதுரை, பட்டுச் செல்வி ராஜேந்தி ரன், ஆர்.முருகேசன், அழகு. நீலமேகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,நூருல் ஹிதா இஸ்மாயில், சன்.சம் பத், மாவட்ட பொருளா ளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர் கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்ல தம்பி, தி.மதியழகன், சி. ராஜேந்தி ரன், டாக்டர் செ.வல்லபன், ந.ஜெக தீஷ் வரன், மாவட்ட இளை ஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ) ஹரிபாஸ் கர், துணை அமைப்பாளர் அ.அப்துல்கரீம், டி.ஆர். சிவசங்கர், வ.சுப்ரமணி யன், ஆர்.அருண், மா.பிர பாகரன், மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர் கள், துணை அமைப்பாளர் கள், உள்ளாட்சி பிரதிநிதி கள் கலந்து கொண்டனர்.

## பெரம்பலூர் மாவட்ட இளைஞரணி சார்பில்

# முதலமைச்சர் பிறந்தநாள் விழா, கருத்தரங்கம்!

### பேராசிரியர் சுப.வீரபாண்டியன் - வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

பெரம்பலூர், ஏப். 10 -

கழகத் தலைவர், முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழாவை முன் னிட்டு, பெரம்பலூர் மாவட்ட இளைஞரணி சார்பில்,

பெரம்பலூர், எளம்ப லூர் சாலையில் உள்ள கர் ணம் சகுந்தலா சுப்பிர மணியம் தனியார் திருமண மண்டபத்தில் கருத்தரங் கம் நடைபெற்றது.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ)ஹரிபாஸ்கர் தலைமையில், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ.அப்துல் கரீம் வரவேற்புரையில், மாவட்ட கழக பொறுப்பா ளர் வீ.ஜெகதீசன், சட்ட மன்ற உறுப்பினர் எம். பிர பாகரன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார் வையாளர் தங்க.சித்தார்த், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.ஆர். சிவசங்கர், வ.சுப்ரமணி யன், மா.பிரபாகரன் ஆகி யோர் முன்னிலை வகித்த னர் .

இந்த கருத்தரங்கில் திரா விடர் இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப.வீர பாண்டியன் கலந்து கொண்டு சிறப்புரை யாற் றினார்.

இதில் திராவிடர் இயக் கத் தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சிற்பி. செல்வராஜ் கொள்கையின் தொடர்ச்சி எனும் தலைப் பிலும், திராவிடர் கழக துணைப் பொதுச்செயலா ளர் வழக்கறிஞர் மதிவதனி நவீனத்துவத்தின் மலர்ச்சி எனும் தலைப்பிலும், தி.மு.க.தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் எஸ். பத்மபிரியா திட்டங்களின் வளர்ச்சி எனும் தலைப்பி லும் பேசினார்கள்.

மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன் னம் சி.இராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்தி ரன், பொதுக்குழு உறுப்பி னர்கள் செ.அண்ணாதுரை, பட்டுச் செல்வி ராஜேந்தி ரன், ஆர்.முருகேசன், அழகு.நீலமேகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,நூருல் ஹிதா இஸ்மா யில், சன். சம்பத், மாவட்ட பொரு ளாளர் செ.ரவி ச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர் கள் என்.கிருஷ்ண மூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்ல தம்பி, தி.மதியழகன், சி. ராஜேந்தி ரன், டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீ ஷ் வரன் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர் கள், துணை அமைப்பாளர் கள், உள்ளாட்சி பிரதிநிதி கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பா ளர் இரா.அருண் நன்றி யுரையாற்றினார்.



திருப்பூர் வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் அவிநாசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேவூர் ரவுண்டானா அருகில் இந்தித் திணிப்பு, நிதிப் பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து திருப்பூர் வடக்கு மாநகரப் பொறுப்பாளர், ஒருங்கிணைந்த திருப்பூர் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ் தலைமையில் துணை அமைப்பா ளர்கள் ப.ரவிச்சந்திரன்,உ.லிங்கேஸ்வரன், அருணாசலம் முன்னிலையில் நடைபெற்ற கண்டன பொதுக் கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், ஊடக வியலாளர் தேரடி இந்திரகுமார், இளம் பேச்சாளர் திருப்பூர் ச.நாகராஜ் கண்டன உரையாற்றினர். இதில் ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஊராட்சி,கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் அரூரில் இளைஞர் அணி சார்பில் திறக்கப்பட உள்ள கலைஞர் நூலகம் மற்றும் அரூர் நகர தி.மு.க. அலுவலகம் திறப்பு விழா முன்னேற்பாடு பணிகளை தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.பழனியப்பன் நேரில் பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார். உடன் நகர செயலாளர் முல்லைரவி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு, ஒன்றிய செயலாளர்கள் கோ.சந்திரமோகன், வே.சௌந்தரராசு மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

## சீர்காழி நகரக் கழக செயலாளர்

# ம. சுப்பராயன் தந்தை மணி மறைவு !

### கழகத்தினர் நேரில் அஞ்சலி!

மயிலாடுதுறை, ஏப்.10 -

மயிலாடுதுறை மாவட் டம் சீர்காழி நகர கழக செயலாளரும், சீர்காழி நாடக மன்ற துணைத் தலைவர் ம.சுப்பராயன் தந்தை எம்.மணி இயற்கை எய்தினார் என்பதை அறி விக்க வருந்துகிறோம் .

மறைந்த மணிக்கு மகன் கள் ம. சுப்பராயன் ம.குரு மூர்த்தி ம. கார்த்தி, மகள் லதாஆகியோர் உள்ளனர் .



சீர்காழி ஒன்றியம் செம் மங்குடியில் உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டி ருந்த உடலுக்கு கழக நிர் வாகிகள், கழகத்தினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து பெருங்களூரில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.சண்முகம் தலைமையிலும், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முத்துசாமி இளஞ்சேரன் வரவேற்புரையிலும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மு.கலைஞர் கருணாநிதி, ப.சிவா (எ) சிவக்குமார், நா.அன்சாரி பாசித் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் திராவிட இயக்க எழுத்தாளர் வே.மதிமாறன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், தலைமை கழக இளம் பேச்சாளர்கள் பேனா தெய்வம், சொ.தமிழினியன் ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள். ஆர்.ஆர்.சாமிநாதன், கவிச்சுடர் கவிதைப்பித்தன், த.சந்திரசேகரன், கே.ஆர்.என்.போஸ், அரு.வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, வை.கோ.ராஜன், ஆர்.செல்லத்துரை, சி.ஆர்.வி.சித்ரா, வி. என். எம்.பாலு, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், செந்தாமரை பாலு, த.செல்வம் மற்றும் மாநகர, ஒன்றிய, நகர , பேரூர் , வட்ட , கிளைக் கழக நிர்வாகிகள் , உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், மாவட்ட அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.